**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 926/ 2023**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜான் கிங்ஸ்லி கிறிஸ்டோபர் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஜி.மத்தியாஸ் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | கோயம்புத்தூர் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 6th, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கோயம்புத்தூர் மாநகரம் E3 சரவணம்பட்டி புலனாய்வுபிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 23.11.2012 ம் தேதி, காலை 08.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, PC2929 மருத்துவமனை சென்று குருசாமி என்பவர் கொடுத்த புகார்மனுவைப் பெற்று வந்தார். நான் அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.295/2012, சட்டப்பிரிவுகள் 307 இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதீமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும்

வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.12** ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

சம்பவத்திற்கு மறுநாள் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கையில் 23.11.2012 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவை கைப்பட யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. PC2929 ன் பெயர் எனக்கு தெரியாது. சேர்ந்தமரத்திற்கும், சங்கரன்கோவிலுக்குமிடையில் 7 கி.மீ தூரம் இருக்கும். சேர்ந்தமரத்திற்கும், பாளையங்கோட்டைக்குமிடையில் 25 கி.மீ தூரம் இருக்கும். நான் முதல் நாளே சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த குழந்தைகளிடம் வாக்குமூலம் பெற்று விட்டு அதனை மறைத்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் பெற்றதாக குறிப்பிட்டு 2 நாட்கள் கழித்து பின்யோசனையின் பேரில் எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் அடித்தல், திருத்தல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாளில், நேரத்தில் எந்த புகார் மனுவும் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி மாநகர ஆணையர் அலுவலகம், கோயம்புத்தூர் மாநகரம், காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Hentry Mohan, Technical Sub Inspector of Police மாநகர ஆணையர் அலுவலகம், கோயம்புத்தூர் மாநகரம், என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:47:13 +0530